DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KAMUTHI.

Case No.CC.310/2022

Prosecution witness – PW.1

| | | | |
|---|---|---|---|
| Name | :திரு.கணேசன் | Caste: | |
| Father's Name | : ராமசாமி | Calling: | |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age: | |

29.06.2026 – 11.25 AM

எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

<u>அரசு தரப்பில் முதல் விசாரணை</u>:–

1. நான் நகர்புலாங்கால் கிராமத்தில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். கடந்த 27.08.2021ம் தேதி பகல் 12.15 மணியளவில் நான் கமுதி பேருந்து நிறுத்தம்அருகே அமைந்துள்ள SBI வங்கியின் ஏடிஎம் மையத்திற்கு சென்றேன். அப்போது கொரணா தொற்று காலக்கட்டம் என்பதால் அனைவரும அரசின் உத்தரவின் படி முகமூடி அணிந்திருந்தோம். நான் சென்ற சமயத்தில் மூன்று, நான்கு நபர்கள் வரிசையாக சென்றோம். எனக்கு பின்னதாக மூகமுடி அணிந்து கொண்டு ஒரு நபர் பணம் எடுப்பதற்காக நின்று கொண்டிருந்தார். நான் அவரிடம் என்னுடைய ஏடிஎம் கார்டை கொடுத்து ரூ.4,000 பணத்தை எடுத்து தருமாறு கேட்டேன். எனென்றால் எனக்கு எடிஎம் மிசினில் பணம் எடுக்க தெரியாது.

2. அந்த நபரும் எனக்கு பணத்தை எடுத்து தருவதாக கூறி எனது எடிஎம் கார்டை பெற்றுக்கொண்டு அதை மிசினில் போட்டுவிட்டு Password கேட்டார். நானும் கூறினேன். அவர் எனது வங்கி கணக்கில் இருந்து எடிஎம் மூலமாக ரூ.4000 பணத்தை எடுத்துக்கொடுத்துவிட்டு ஒரு கார்டை கொடுத்தார். நான் அந்த கார்டை வாங்கிக்கொண்டு வீட்டிற்கு சென்றுவிட்டேன். பின்னர் ஒரு வாரம் கழித்து எஸ்பிஐ வங்கிற்கு நான் அடமானம் வைத்துள்ள நகைகளுக்கு வட்டிபணம் கட்டுவதற்காக சென்றேன். அப்போது வங்கிக்காரர்களிடம் இருந்து பணத்தை எடுப்பதற்காக ரசீதை பெற்று அதை அவர்களிடம் கூறி விவரம் நிரப்பி தாக்கால் செய்தபோது அங்கிருந்த வங்கி பணியாளர் என்னிடம் என்னுடைய வங்கி கணக்கில் பணம் இல்லை என்று தெரிவித்தார். அதனால் நான் மேலாளரை சென்று பார்த்து நடந்த விவரங்களை எல்லாம் தெரிவித்தேன். மேலும என்னுடைய வங்கி கணக்கு புத்தத்தையும் அவரிடம்

கொடுத்தேன். அவர் எனது வங்கி கணக்கில் இருந்து ரூ.36,100–ஐ 4,5 தவணைகளில் எடுத்திருப்பதகாக தெரிவித்தார். மேலும் அவர் அங்கிருந்த சிசிடிவி கேமராவை பார்த்துவிட்டு ஏடிஎம்–ல் பதிவாகி இருந்த கேமரா பதிவுகளில் எனக்கு பின்னதாக வந்த நபரை பார்த்து கூறுமாறு தெரிவித்தார். நானும் அவரை பார்த்துவிட்டு வெள்ளை பேண்ட், வெள்ளை சட்டை அணிந்திருந்த நபரை காண்பித்தேன்.

3. மேலும் அந்த சமயத்தில்தான் நான் கையில் வைத்திருந்த கார்ட் ஏடிஎம் கார்ட் இல்லை என்றும், என்னிடம் எடிஎம் மையத்தில் வைத்து எனக்கு உதவி செய்வதாக கூறி பணத்தை எடுத்துகொடுத்த நபர் அந்த கார்டுக்கு பதிலாக வேறு ஒரு கார்டை கொடுத்திருப்பதும் தெரியவந்தது. என்னிடம் கொடுத்த கார்டை வங்கி பணியாளர்கள் மிசினில் போட்டு பார்த்த போது அதற்குரிய வங்கி கணக்கு ஒரு பெண்மணியின் பெயரில் இருந்ததும் தெரியவந்தது. உடனே மேலாளர் என்னை கமுதி காவல் நிலையம் சென்று புகார் அளிக்குமாறு தெரிவித்தார். நான் உடனே கமுதி காவல் நிலையம் சென்று புகார் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் அளித்ததுதான். அந்த புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். மேற்படி **புகார் மனு அ.சா.ஆ.1 ஆக** குறியீடு செய்யப்படுகிறது. எனக்கு அன்றைய தினம் என்னுடைய எடிஎம் கார்டை பெற்றுக்கொண்டு அதை மாற்றி கொடுத்த நபரை பார்த்தால் அடையாளம் தெரியாது. எனென்றால் அவர் முகமூடி அணிந்திருந்தார். என்னிடம் காட்டப்படும் எடிஎம் கார்டைதான் முகமுடி அணிந்த நபர் என்னிடம் மாற்றி கொடுத்தார். மேற்படி **எடிஎம் கார்ட் அ.சா.பொ.2 ஆக** குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>

1. நான் தறபோது முதல் விசாரணையில் கூறிய சங்கதிகளைத்தான் புகாரிலும் கூறியுள்ளேன் என்றால் சரிதான். எங்கள் ஊருக்கு அருகில் எடிஎம் மையங்கள் உள்ளன என்றால் சரியல்ல. ஜெராக்ஸ் கடைதான் உள்ளது. எடிஎம் கார்டில் அந்த கார்ட்டுக்கு உரிமையாளர் யார் என்பது எழுதப்பட்டிருக்கும் என்றால் சரிதான். எடிஎம் கார்ட் பல கலர்களில் இருக்கும் என்றால் சரிதான். எனது எடிஎம் கார்ட் எந்த கலரில் இருக்கும் என்றால் பல கலரில் இருந்தது எனக்கு குறிப்பிட்டு தெரியவில்லை. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நாளில் எத்தனை மணிக்கு ஊரில் இருந்து கிளம்பினேன் என்றால் காலை 11.00 மணியளவில் கிளம்பினேன்.

2. நான் ஊரில் இருந்து வரும் போது என்னுடைய எடிஎம் கார்ட் என்னிடம் இருந்தது என்றால் சரிதான். நான் எடிஎம்யில் பணம் எடுக்கும் போது என்னுடன் மூன்று நபர்கள் வரை இருந்தார்கள். என்னை ஏமாற்றியதாக சொல்லப்படும் நபரை தவிர்த்து வேறு யார் இருந்தார்கள் என்று போலிசாரிடம் கூறினேன் என்றால் வேறு யாரையும் கூறவில்லை. ஒவ்வொரு எடிஎம் கார்ட்டுக்கும் ஒரு பின் நம்பர் இருக்கும் என்றால் சரிதான். பொதுவாக பின் நம்பரை யாருக்கும் தெரிவிக்க கூடாது என்று கூறிதான் வங்கியில் இருந்து அதை வழங்குவார்கள் என்றால் சரிதான். எனக்கு பின்னால் இருந்ததாக சொல்லப்படும் நபர் பற்றிய விவரங்களை போலிசாரிடம் கூறினேனா என்றால் பேண்ட் சட்டை போட்டு முகமூடி அணிந்த நபர் என்று சொன்னேன். எந்த கலர் பேண்ட் சண்டை என்று சொல்லவில்லை.

3. நான் அந்த நபரிடம் எடிஎம் கார்டை கொடுத்த விவரம் யாருக்கு எல்லாம் தெரியும் என்றால் யாருக்கும் தெரியாது. எனக்கு தமிழ் மற்றும் ஆங்கிலம் எழுத படிக்க தெரியும். எனக்கு சுமார் 10 வருடங்களுக்கு முன்னரே கண் பார்வை மங்கலாகி விட்டது. அதற்கு அறுவை சிகிச்சை செய்துள்ளேன். என்னால் பொடி எழுத்துக்களை தற்போதும் பார்க்க இயலாது. அ.சா.பொ.1 ல் என்ன பெயர் இருந்ததது என்பதை அந்த பரிமாற்றத்திற்கு பின்னதாக நான் பார்க்கவில்லையா என்றால் இல்லை. மேற்படி நபர் ரூ.4,000 யை 8 500 ரூபாய் நோட்டுகளாக எடுத்துக்கொடுத்தார். அதன் பிறகு என்னிடம் எடிஎம் கார்ட்டை கொடுத்தாரா என்றால் ஆமாம். கொடுத்தார். ஆனால் அது என்னுடைய கார்ட் இல்லை. மாற்றி கொடுத்துவிட்டார். கார்ட்டை மாற்றி கொடுத்த விவரத்தை ஒருவாரம் கழித்து வங்கிக்கு சென்றபோதுதான் தெரிந்துகொண்டேன். என்னிடம் பட்டன் செல்போன் உள்ளது. என்னுடைய எடிஎம் கார்ட்டில் இருந்து பணம் எடுக்கப்பட்டால் செல்போனிற்கு மெசேஜ் வருமா என்றால் வராது.

4. வங்கி கணக்கில் இருந்து பணம் எடுக்கப்பட்டால் செல்போனிற்கு மெசேஜ் வரும் என்றாலும் நான் பொய்யாக கூறுகிறேன் என்றாலும் சரியல்ல. மேற்படி நபர் எனது வங்கி கணக்கில் இருந்து ஆறு முறை பணம் எடுத்ததாக புகாரில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். முதன் முறை எனது வங்கி கணக்கில் இருந்து பணம் எடுக்கப்பட்ட உடனே நான் புகார் எதுவும் அளிக்கவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மறு வாரம் தெரிந்ததால்தான் புகார் அளித்தேன். மேற்படி விவரத்தையும் மேனேஜர் சொல்லிதான் தெரிந்துகொண்டேன் என்றால் சரிதான். என்னிடம் வங்கி கணக்கு

பரிவர்த்தனை பட்டியலையும் எடுத்துக்கொடுத்தார். ஆறு முறை பணம் எடுத்ததாக புகாரில் சொல்லியுள்ள நிலையில் எந்தேந்த தேதிகளில் எவ்வளவு பணம் எடுக்கப்பட்டது என்ற விவரத்தை நான் புகாரிலோ , நான் போலிசார் விசாரித்த போதோ சொல்லவில்லை என்றால் சரிதான். புகாரை நான்தான் கொடுத்தேன். எனக்கு யாரும் புகார் அளிக்க சொல்லி சொல்லவில்லை. புகார் அளித்த பிறகு காவல் நிலையத்தில் வைத்து போலிசார் என்னை விசாரித்தனர். அதன் பின்னிட்டு என்னை விசாரிக்கவில்லை.

5. யார் என்னுடைய எடிஎம் கார்டை மாற்றி கொடுத்தவர் என்பதை தற்போது வரை நான் தெரிந்துகொள்ளவில்லை என்றால் சரிதான். அவர் முகமுடி அணிந்திருந்தார். போலிசார் எதிரியை பற்றிய விவரங்களை என்னிடம் கூறவில்லை என்றால் சரிதான். நான் கூறியபடி அன்றைய தினம் குற்றம் சுமத்தப்பட்ட நபர் என்னுடைய எடிஎம் கார்டை பெற்றுக்கொண்டு அதை எடிஎம் மிசினில் செலுத்தி நான் கூறியபடி ரூ.4000 பணத்தை என்னிடம் எடுத்துக்கொடுத்துவிட்டு அதே எடிஎம் கார்டை என்னிடம் கொடுத்துவிட்டார் என்றாலும் நான்தான் அதை தவறுதலாக எங்கேயோ வைத்துவிட்டு தற்போது பொய்யாக புகார் அளித்து சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் எனக்கு பின்னால் இருந்த நபர் என்னிடம் இருந்து எடிஎம் கார்ட்டை பெற்றுக்கொண்டு பணத்தை எடுத்துக்கொடுத்துவிட்டு அதை மாற்றிக்கொடுத்துவிட்டார். நான் சொன்ன படி சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் எதிரிக்கும் வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் சரியல்ல. எதிரி என்னுடைய கார்டை மாற்றி கொடுத்துவிட்டார் என்று கூறுவது பொய்யானது என்றால் சரியல்ல.

THANGA KARTHIKA

Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.06.29 17:14:44 +0530